<u>அரக்கோணம் நகராட்சி</u>

<u>சிறப்பு மன்ற கூட்ட அறிவிப்பு</u>

கூட்ட எண்.54 நாள்.03.03.2020.

பொருள் : சிறப்பு மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 03.03.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

-----

அரக்கோணம் நகராட்சி 03.03.2020 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சிறப்பு மன்றக் கூட்டம் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை ஒழுங்குமுறை விதிகள் 2017**-ன்படி 2011ம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் 31.03.2016-ம் ஆண்டின் குடியிருப்புகள் எண்ணிக்கை அடிப்படையிலும், வார்டு மறுவரையறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும் அரக்கோணம் நகராட்சியின் 36 வார்டுகளுக்கான வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டு உரிய வழிமுறையாக மாநில வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்பொருள் சார்ந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டு, இறுதி வார்டு மறுவரையறைக்கான அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு இதற்கான அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழ் எண்.407**, நாள்: 14.12.2018-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்பின்பு புதியதாக 9 மாவட்டங்கள் உருவாக்கி தமிழக அரசு ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தியதை தொடர்ந்து இந்த மாவட்டங்களில் அமைந்துள்ள உள்ளாட்சிகளுக்கு மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி 2011-ம் வருட மக்கள் தொகை மற்றும் 31.03.2019-ம் தேதி வரையிலான குடியிருப்புகள் அடிப்படையாக கொண்டு மீள வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்து, வரைவு பட்டியலில் வெளியிட வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் வழங்கிய வழிகாட்டுதலின்படி 31.03.2019-ம் தேதி வரையிலான குடியிருப்புகளை சேர்த்து வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டு 18.02.2020-ம் தேதியன்று பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் தெரிவிக்க கோரி வரைவு வார்டு மறுவரையறை பட்டியல் முறைப்படி வெளியிடப்பட்டது.

இதன்மீது உள்ளாட்சி அளவில் 18.02.2020 முதல் 22.02.2020 வரை பெறப்பட்ட மனுக்கள், 25.02.2020-ம் தேதியன்று இராணிப்பேட்டை மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைப்பெற்ற கருத்து கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் 06.03.2020-ம் தேதியன்று மேல்விஷாரம் அப்துல் ஹக்கீம் பொறியியல் கல்லூரியில் மாநில வார்டு மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்ட கருத்து கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் குறித்து சம்மந்தப்பட்ட மனுதாரர்களுடன் கலந்து பேசியும், உரிய கள ஆய்வு மேற்கொண்டும், இம்மனுக்கள் மீது எடுக்கப்பட்ட முடிவுகளின்படிக்கு இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயாரிக்கப்பட்டு உரிய வழிமுறையாக மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் மாநில வார்டு மறுவரையறை ஆணைய ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட உள்ளது.

மேற்படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.2342/2017/எப்1)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**